**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 46/2021**

**Prosecution Witness**:P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | Siva (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th day of August 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

1) நான் தற்போது நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர், பாண்டமங்கலத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி பாக்கியம் எனது அம்மா. விபத்தில் இறந்துபோன ஜெயராஜ் எனது அப்பா. கடந்த 29.03.2021ம் தேதியன்று எனது அப்பா ஜெயராஜ் ஈரோடு – கரூர் ரோட்டில் கருமாண்டம்பாளையத்தில் இருந்து குளத்தோட்டத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு நடந்து வந்துகொண்டிருந்தார். அன்று இரவு சுமார் 08.00 மணிக்கு அவர் நடந்து வந்துகொண்டிருந்தபோது கார்த்திகேயன் வீட்டிற்கு முன்பு பஜாஜ் இருசக்கர வாகனம் எனது அப்பா ஜெயராஜ் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக எனது அம்மா பாக்கியம் போன் மூலம் தகவல் தெரிவித்தார்.

2) நான் ஈரோடு லோட்டஸ் மருத்துவமனை சென்று விபத்தில் அடிபட்ட எனது அப்பா ஜெயராஜை பார்த்தேன். அவருக்கு தலை மற்றும் நெஞ்சு பகுதியில் பலத்த அடிபட்டிருந்தது. நான் விசாரித்தபோது எனது அப்பாவின் மீது இருசக்கர வாகனத்தை மோதியவர் பெயர் கார்த்திக் என்று தெரிந்து கொண்டேன். விபத்து பற்றி நான்தான் காவல் நிலையத்தில் புகார் செய்தேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) விபத்திற்கு அடுத்தநாள் 30.03.2021ம் தேதி எனது அப்பா ஜெயராஜ் லோட்டஸ் மருத்துவமனையில் சிகிச்சை பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். அவரின் பிரேதத்தை

ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். கொடுமுடி காவல் ஆய்வாளர் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை வந்து எனது அப்பா ஜெயராஜின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரணை செய்தபோது நானும் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எனது அப்பா இறந்ததற்கு நஷ்டஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். புகாரில் எனது அப்பா ரோட்டை கிழக்கில் இருந்து மேற்கே குறுக்கே கடந்தபோது இந்த விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து நடந்த ரோடு தென்வடல் ரோடு மற்றும் தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். அந்த இடத்தில் பாதசாரிகள் ரோட்டை குறுக்கே கடப்பதற்கான அடையாளங்கள் எதுவும் நெடுஞ்சாலையில் இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 70 வயதாகிறது.

2) எதிரி ஓட்டிச் சென்ற வாகனம் தெற்கே இருந்து வடக்கு நோக்கி சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றால் நான்தான் புகார் கொடுத்தேன். அ.சா.ஆ.1 புகாரை கொடுப்பதற்கு முன்னரோ எனது தகப்பனாரை மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பது தெரிந்து மலையம்பாளையம் காவல் நிலையத்தில் இருந்து வந்து என்னிடமும் எனது தாயாரிடமும் கையெழுத்து பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு காவல் நிலையத்திற்கு வரச்சொன்னதன் பேரில் நான் மலையம்பாளையம் காவல் நிலையம் சென்றேன்.

3) போலீசார் சொல்லித்தான் நான் புகாரை எழுதினேன் என்றால் நடந்ததை அவர் எழுதச் சொன்னதால் நான் எழுதினேன். நான் புகாரை எழுதும்போது சில திருத்தங்களை போலீசார் சொன்னார்கள். அதை நான் திருத்தி எழுதினேன். சம்பவ இடத்தை நான் பார்த்தேன். அந்த இடத்தில் ரத்தம் கிடந்தது என்றால் சரிதான். அடிபட்ட வண்டியும் கிடந்தது என்றால் சரிதான். நான் காவல் நிலையத்தில் இருந்து காவலருடன் சென்று அந்த வாகனத்தை காவல் நிலையம் எடுத்து வந்தேன் என்றால் சரிதான்.

4) முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் யாவும் தவறு என்றால்

சரியல்ல. நஷ்ட ஈட்டு வழக்கிற்காக உண்மையை மறைத்து தவறான புகாரைக் கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்) கோ.பாண்டியராஜன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 46/2021**

**Prosecution Witness**:P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | Bakkiyam (PW2) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **20th day of August 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

*(Accused present.*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர், பாண்டமங்கலத்தில் குடியிருந்து கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சிவா எனது மகன். விபத்தில் இறந்துபோன ஜெயராஜ் எனது கணவர். கடந்த 29.03.2021-ம் தேதியன்று எனது அப்பா ஜெயராஜ் ஈரோடு - கரூர் ரோட்டில் கருமாண்டம்பாளையத்தில் இருந்து குளத்தோட்டத்தில் உள்ள எங்கள் வீட்டிற்கு நடந்து வந்துகொண்டிருந்தார். அன்று இரவு சுமார் 08.00 மணிக்கு அவர் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தபோது அவருக்கு எதிர்திசையில் தெற்கே இருந்து வடக்காக வந்த ஒரு பஜாஜ் இருசக்கர வாகனம் எனது கணவர் ஜெயராஜ் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடத்தில் இருந்த விஜயகுமார் போன் மூலம் தகவல் தெரிவித்தார். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்துவிட்டு எனது மகன் அ.சா.1 சிவாவிற்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் தெரிவித்தேன்.

2) எனது கணவருக்கு தலை மற்றும் நெஞ்சு பகுதியில் பலத்த அடிபட்டிருந்தது. ஆஜரில் உள்ள எதிரிதான் எனது கணவர் மீது வாகனத்தை மோதி விபத்தை ஏற்படுத்தியவர் ஆவார். விபத்து பற்றி எனது மகன் அ.சா.1 சிவா காவல் நிலையத்தில் புகார் செய்தார். விபத்தில் அடிபட்ட எனது கணவர் ஜெயராஜை ஈரோடு லோட்டஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். ஆனால் விபத்திற்கு அடுத்தநாள் 30.03.2021ம் தேதி எனது கணவர் ஜெயராஜ் லோட்டஸ் மருத்துவமனையில் சிகிச்சை

பலன் அளிக்காமல் இறந்துவிட்டார். அவரின் பிரேதத்தை ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். கொடுமுடி காவல் ஆய்வாளர் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை வந்து எனது கணவர் ஜெயராஜின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரணை செய்தபோது நானும் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) போலீசார் என்னை விசாரணை செய்தபோது எனது கணவர் தென்வடல் ரோட்டில் கிழக்கில் இருந்து மேற்கே செல்ல ரோட்டை குறுக்கே கடக்கும்போது சம்பவம் நடந்ததாக பக்கத்தில் இருந்தவர்கள் சொல்லி நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

(ஒப்பம்) கோ.பாண்டியராஜன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.